[1972 சனவரி 28

தனியார் பேருந்துகளில் திருக்குறள்

* 109 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பேருந்துகளிலும் திருக்குறள் எழுதி வைக்கும் ஆணை பிறப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்து களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளை ஒவ்வொன்றாக எழுதி வைக்கப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசுப் பேருந்துகளில் வெறுங் குறள்கள் மட்டும் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றின் பொருளை யும் எழுத அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ் படித்தவர்களுக்கு பொருள் தெரியும்.

மன்னார்குடி—ஆலங்குடி நகரப்பேருந்து.

* 110 வினா.—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலம் வழியாக ஆலங்குடிக்கு டவுன் பஸ் விடுகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, பொதுமக்க ளுடைய நலனை உத்தேசித்து, இந்தத் திட்டத்தை மேற்கொள்வார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மன்னார்குடியிலிருந்து நீடாமங்கலத்திற்கு 94 ட்ரிப்பும், நீடாமங்கலத்திலிருந்து ஆலங்குடிக்கு 66 ட்ரிப்புக்களும் ஓடுவதால் வேறு தேவையில்லை.

THIRU K. T. K. THANGAMANI : Sir, there was a question relating to the running of lorry service after mid-night, to be answered by the Hon. Minister for Transport on the 25th instant and it was postponed. I want to know when it is going to be taken up?

1972 சனவரி 28]

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பட்டியலில் போட்டிருந்தால் தான் இன்றைக்கு வரும். பட்டியலில் இல்லாததால், இன்றைக்கு அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஒத்திவைக்கும் கேள்விகள், நிகழ்ச்சி நிரல் தயார் செய்யும்போது, சேர்த்திருந்தால்தான் அது அவைக்கு வரும். ஆனால் கண்டிப்பாக பதில் வரும்.

வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

அரசுக்கு அளிக்கப்பட்ட அறிக்கைகள் மீது விவாதம் நடத்துவது குறித்து.

Dr. H. V. HANDE : Sir, on a point of order. During the meeting of the Business Advisory Committee, the hon. Member, Thiru Thangamani, wanted that the reports submitted to the Government should be discussed. The Hon. Speaker and the Hon. Chief Minister assured us that most of those reports can be discussed during the discussion on the Governor's Address. But the report relating to the incidents at the Annamalai University has not been placed . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐ ஆம் சாரி. பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசவேண்டியதை இப்பொழுது ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு பேசுவது சரியில்லை. உறுப்பினரை இடத்தில் அமருமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட விஷயங்களை பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அல்லது அவையின் முன்னவர் அல்லது முதல் அமைச்சரிடம் சொல்லவேண்டும். அனுபவம் வாய்ந்த உறுப்பினர் இப்படி வரம்பு முறைகளைத் தெரிந்தவர்கள் எப்படி வேண்டுமானாலும் அவையின் இடத்தை எடுத்துக் கொள்ள லாம் என்று சொல்ல வருவது, பேரவையின் கவுரவத்திற்கும், தனி உறுப்பினருடைய கவுரவத்திற்கும் குறைவானது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : I am not referring to the Business Advisory Committee . . .

Mr. SPEAKER : The hon. Member may resume his seat.

Dr. H. V. HANDE : Sir, how can we discuss the report when it is not placed on the table of the House?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் இப்படிச் சொல்வ தற்கு ஏதாவது விதிமுறைகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் இந்த மாதிரி செய்தால், மன்றத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்கிறார்கள் என்ற முறையில், வருந்தத்தக்க முறையில் மேற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்.